# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2012 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, துறைமுக, விமானநிலைய அபிவிருத்தி அறவீடு (திருத்தச்) சட்டம்

---

*(2012 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---


*2012, மாச்சு மாதம் 30 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 3.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2012 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க,துறைமுக, விமானநிலைய அபிவிருத்தி அறவீடு (திருத்தச்) சட்டம்

[2012 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.ஓ 7/2012

### 2011ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கான தொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

**1.** இச்சட்டம், 2012 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, துறைமுக, விமானநிலைய அபிவிருத்தி அறவீடு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் நடைமுறையில் வெவ்வேறு தேதிகள் இயைபான பிரிவுகளில் வெவ்வேறான தொழிற்பாட்டுத் தேதிகள் குறித்துரைக்கப்பட்டிருந்தாலொழிய, 2012 சனவரி 1 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்கச் சட்டத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**2.** 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 4 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவை நீக்கஞ் செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(2) இரண்டாம், 3 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் எவ் வாறிருப்பினும், சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி-

(i) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் இனங்காணப்பட்ட ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்தின் பாவனைக்கு அவ்வாறு இறக்குமதி செய்யப் பட்ட பொருளின்மீது வருமதியான வரியின் தொகையை மேவும் கூட்டிணைப்பு உத்தரவாத மொன்று கொடுத்துதவப்படுவதற்கமைய, எந்தத் தேசிய பொருளாதாரத்தின் மீதான வரி அரசாங்கத்தால் ஏற்கப்படுகின்றதோ அந்தத் தேசிய பொருளாதாரத்தின் நலனை கருத்திற் கொண்டு, 2009 யூலை 1 ஆம் தேதி முதல் அத்தகைய கருத்திட்டம் பூர்த்தியானதன் பின்னர் பொருள் மீள் ஏற்றுமதி செய்யப்படும் நேரம் வரை ; அல்லது

(ii) விடயத்திற்கேற்ப 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 16ஈ அல்லது 17அ என்னும் பிரிவின்கீழ் வரி விலக்களிப்பிற்குத் தகைமையுள்ள ஏதேனும் பொறுப்பு முயற்சியால் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் காலப்பகுதியின்போது 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை முதலீட்டுச் சபையுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்கு அத்தகைய பொறுப்பு முயற்சியின் பாவனைக்கு செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள் நிறைவேற்றப்படுவதற்கும் அத்துடன் அவ்வாறு இறக்குமதி செய்யப்படும் பொருளின்மீது வருமதியான வரித்தொகையை மேவும் வங்கி உத்தரவாதமொன்று கொடுத்துதவப்படுவதற்கும் அமைய வரி விலக்களிப்பு செய்யப்பட்ட பொறியாக, பொறித்தொகுதியாக அல்லது உபகரணமாகவிருக்கும்,

ஏதேனும் பொருளின் இறக்குமதியின் மீதான அறவீட்டின் சேகரிப்பை பிற்போடுதல் வேண்டும்.”.

*சிங்கள, தமிழ் உரைகளுக் கிடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.*

**3**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்